பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு

The EELANADU

Registered as a Newspaper at the General PostOffice Sri Lanka under No: QB/8945/78

மலர்: 21 மாசி 1 ரபி-அவ் 15 இதழ்: 3
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 13-2-79

UNIVERSITY OF SRI LANKA RECEIVED PERIODICALS DIVISION LIBRARY

# "வடபகுதி மக்களுக்கு அரசு பாகுபாடு காட்டாது

## குறைகளை நிவர்த்திசெய்வேன் என்கிறார் போக்குவரத்து அமைச்சர்

(கொக்குவில்)

பலாத்காரத்தினாலோ, பகிஷ்கரிப்பினாலோ பிரச்சினைகளைத் தீர்க்க முடியாது. இந்த அரசு வடபகுதி மக்களுக்கு எந்தவித பாகுபாடும் காட்டமாட்டாது. வடபகுதியும் இலங்கையின் ஒரு பகுதியே தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மந்திரிசபை தீர்மானித்துள்ளது. இது ஒரு நல்ல சந்தர்ப்பம். இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமிழ் பேசும் மந்திரி என்ற முறையில் நான் உங்கள் குறைகளை ஜனாதிபதியிடம் எடுத்துக் கூறி நிவர்த்தி செய்வேன்."

இவ்வாறு நேற்றுக் காலை யாழ் கச்சேரியில் நடைபெற்ற உயர்மட்ட அதிகாரிகள் மத்தியில் நடைபெற்ற மகாநாட்டில் போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். எம். மொகமெட் பேசுகையில் கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் இம்மகாநாடு நடைபெற்றது.

இம்மகாநாட்டில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஊர்காவற்றுறை எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம், சாவகச்சேரி எம். பி திரு. வி. என். நவரத்தினம், கோப்பாய் எம். பி திரு. கதிரவேலுப்பிள்ளை, யாழ்ப்பாண எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன், உடுப்பிட்டி எம். பி. திரு. ரி. இராசலிங்

(6-ம் பக்கம் பார்க்க)

# வடக்கில் வழமைபோல் பாடசாலைகள் நடக்கும்

## பகிஷ்கரிப்பு சுற்று நிருபங்களுக்கு பதிலளிப்பதுபற்றியும் தீர்மானம்

### வடமாநில அதிபர் சங்கம் முடிவு

(யாழ்ப்பாணம்)

வடபகுதியிலுள்ள பாடசாலைகளில் இன்றிலிருந்து வழமைபோல் பாடபோதனை நடைபெறவிருக்கின்றது. வடமாநிலக் கல்லூரி பாடசாலைகள் அதிபர்கள் சங்கம் நேற்றுமாலை கூடி இத்தீர்மானத்தை மேற்கொண்டன.

யாழ். மத்தியகல்லூரியில் நேற்றுப் பிற்பகல் திரு. கே. சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற வடமாநிலக் கல்லூரி அதிபர்கள் சங்க மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி சகல பாடசாலைகளும் வழமைபோல் நடைபெறும்.

பகிஷ்கரிப்பு தொடர்பான சுற்றுநிருபங்களுக்கு பதில் அனுப்புவதற்கு வடமாநில அதிபர் சங்கத்தின் அறிவுறுத்தல் கிடைக்கும்வரை அதிபர்கள் காத்திருக்கவேண்டுமென்றும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

லீவில் நின்ற ஆசிரியர்கட்கு அனுப்பப்பட்ட பதவிவிலகல் கடிதங்களை உடன் வாபஸ் பெறும்படி கல்விஅமைச்சைக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

#### இளைஞர்பேரவை கோரிக்கை

எந்தச் சந்தர்ப்பத்திலும் மாணவர்கள் மன்னிப்புக் கடிதமோ, வைத்திய அத்தாட்சிப் பத்திரமோ, பாடசாலை அதிபர்களுக்கு கொடுக்க வேண்டாமென தமிழ் மாணவர்களை கேட்டுக்கொள்ளும் அதேவேளையில் பாடசாலைக்கு எல்லா மாணவர்களையும் செல்லுமாறு நேற்று மாலை தமிழ்இளைஞர் பேரவை விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

பாடசாலைப் பகிஷ்கரிப்புச் சம்பந்தமாக வடமாநில அதிபர்கள் சங்கம் பின்வருவோரைக் கொண்ட நடவடிக்கைக் குழுவொன்றையும் தெரிவு செய்துள்ளது.

தலைவர் திரு ஈ. கே. சண்முகநாதன், திருவாளர்கள் பி. எஸ். குமாரசாமி, எஸ். நடராசா, அரியரெத்தினம், குணபாலசிங்கம், தி. நடராசா ஆனந்தராஜா, த. இராஜேந்திரம், கனகசபாபதி, சிவசுப்பிரமணியம், பேராயிரவர், சிவநேசன், வெற்றிவேலு, பத்மநாதன், அருணாசலம், அ. பொன்னம்பலம்.

பாடசாலைகளைப் பகிஷ்கரித்த மாணவர்களைப் பாடசாலைக்குள் அனுமதித்துவகுப்புகளை வழமைபோல் நடத்த வேண்டுமென்ற தீர்மானமும் வடமாகாண அதிபர் சங்கம் கூட்டிய கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. இத் தீர்மானத்துக்கு இலங்கை தமிழாசிரியர் சங்கமும் அனுசரணையாக இருந்தது இத்

(6ம்- பக்கம் பார்க்க)

# பலபாடசாலைகளில் மாணவர் திரும்பிச் சென்றனர்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் பெரும்பாலான பாடசாலைகளில் நேற்று மாணவர்கள் அதிபர்களாலும் ஆசிரியர்களாலும் திருப்பி அனுப்பப்பட்டனர். மாணவர்கள் சில பாடசாலைகளுக்கு முன் நின்று ஆர்ப்பாட்டம் செய்தனர். நல்லூரில் ஒரு பாடசாலையில் அனுமதிக்கப்படாத மாணவர்கள்வீசினார்களென்றும்சிலர் ஆசிரியர்களை கேலி செய்தனரென்றும் கொக்குவிலில் கொடும்பாவி எரிக்கப்பட்டதென்றும் தெரிகிறது.

பாடசாலை வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றி அனுமதிக்கவேண்டாம் என்ற கல்வி அமைச்சின் கட்டளையைத் தொடர்ந்து மாணவர்கள் நேற்று அனுமதிக்கப்படவில்லை.

பகிஷ்கரிப்பு செய்த மாணவர்கள் தொடர்பான விபரங்கள் 20 சதமான அதிபர்கள் நேற்றுக் காலை 9-30 மணிக்கு முன் வடமாநில கல்வி அதிபர் திரு மாணிக்கவாசகருக்கு அனுப்பியிருந்தனராம்.

வடமாநிலக் கல்வி அதிபர் தமக்குக் கிடைத்த விபரங்களைக் கொண்டு அவசரமாக இன்று கல்வி அமைச்சுக்குச் செல்கின்றார்.

நேற்றுக் காலை 9-30 மணிக்கு முன்னர் மாணவர் தொடர்பான விபரங்களை அனுப்பி வைக்காத அதிபர்கள் மீது விளக்கம் கோரப்பட்டு நடவடிக்கை எடுக்கப் படவிருப்பதாக கல்வி வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணத்தில் ஒரு பிரபல பாடசாலையில் வைத்திய அத்தாட்சிப்பத்திரமின்றி சென்ற மாணவர்கள் அனுமதிக்கப்பட்டனர். இவர்கள் வரவும்வழக்கமான இடாப்பில் பதியப்பட்டது. மற்றைய பாடசாலைகளில் கடந்த வாரம் கடதாசிகளில் வரவு பதியப்பட்டது.

கொக்குவிலில் கல்லூரி ஒன்றில் மாணவர்கள் அனுமதிக்கப்படாததினால் கல்வி அமைச்சரின் கொடும்பாவி ஒன்று மாணவர்களால் ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டு எரிக்கப்பட்டதாம்.

சில பாடசாலைகளில் வைத்திய அத்தாட்சிப்பத்திரங்களை விரைவில் கொண்டுவருவோம் என உறுதியளித்த மாணவர்கள் வகுப்பில் அனுமதிக்கப்பட்டனர்.

[6-ம் பக்கம் பார்க்க]

# ஏப்ரலுக்குள் மேலும்

## 50 பஸ்கள் வந்துசேரும், 44 வந்துவிட்டன

### அமைச்சர் முகம்மது அறிவிப்பு

[யாழ்ப்பாணம்]

"இவ்வருடம் ஏப்ரல் மாதத்துக்கு முன் யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மேலும் 50 புதிய பஸ்வண்டிகள்சேவைக்கு அனுப்பப்படும் எமது அரசு ஆட்சிக்கு வந்தபின் இது வரை அதாவது கடந்த 16 மாத காலத்துக்குள் வடபகுதிக்கு 44 புதிய பஸ்வண்டிகளை அனுப்பியிருக்கிறோம்.

இவ்வாறு நேற்றுக் காலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் தூரஇட பஸ்சேவைகளுக்கென அமைக்கப்பட்ட புதிய பஸ்தரிப்பு நிலையத்தை திறந்துவைத்து உரையாற்றிய போக்குவரத்து அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாநகர விசேட ஆணையாளர் திரு கே. சிவஞானம் தலைமையில் நடந்த இத்திறப்புவிழா வைபவத்தில் வடபிரதேச இ. போ. ச. தலைவர் திரு. அமரசிங்கம் யாழ் பிரதேச இ. போ. ச. கட்டுப்பாட்டதிகாரி திரு. என் தியாகராசா உட்பட பிரதேச இ. போ ச, யாழ் மாநகரசபை ஆகியவற்றின் உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் கலந்துகொண்டு அமைச்சரை வரவேற்றனர்.

#### முன்பு புதிய பஸ்கள் வரவில்லை

அமைச்சர் அல்ஹாஜ் முகம்மது மேசுகையில் மேலும் கூறியதாவது; கடந்த அரசாங்க காலத்தில் வடபகுதிக்கு புதிய பஸ் வண்டிகள் எதுவும் அனுப்பப்படவில்லை. நாங்கள் எவ்வளவு தூரம் மக்கள் குறைகளைத் தீர்க்க முயன்றபோதும் இங்கு குறைபாடுகள் என்னால் உணர முடிகிறது. இவை படிப்படியாகக் தீர்க்கப்படும். இந்த நாட்டில் நடுநிலையான ஒரு சமதர்ம சேவைகளையே நாம் செய்ய முயல்கின்றோம். இலங்கை மக்கள் என்ற முறையில் எந்தவித பாகுபாடும் காட்டாமல் வேற்றுமையில்லாமல் சேவைகளைச் செய்

[6-ம் பக்கம் பார்க்க]

# ஈரானில் தொடர்ந்து சண்டை!

((தெஹ்ரான்)

ஈரானில் டாக்டர் பக்தியார் அரசாங்கம் கவிழ்க்கப்பட்டுவிட்டபோதிலும் மன்னர் ஷாவுக்கு விசுவாசமான படைகளுக்கும் மதத்தலைவர் அயத்துல்லா கொமேனிக்கு ஆதரவான படைகளுக்குமிடையில் நேற்று பலத்த சண்டை நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

# மாணவர்பேரவை கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைப் பகிஷ்கரிப்புக் குறித்து கல்விஅமைச்சு பிறப்பித்துள்ள உத்தரவை மாணவர் பேரவை கண்டித்ததுடன் போராட்டம் என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் ஒன்றையும் வெளியிட்டுள்ளது.

இப்பிரசுரத்தில் தெரிவித்திருப்பதாவது "மாணவர் சமுதாயம் சரணடையாது. வைத்திய அத்தாட்சிப் பத்திரம் சமர்ப்பிக்க நாம் நோயாளியல்ல' மன்னிப்புக்கோர நாம் தவறுசெய்தவர்களல்லர் எமது போராட்டம் நியாயமானது. எதுவித நிபந்தனையுமின்றி மாணவர்களைப் பாடசாலைக்கு அனுமதி என்றும் கூறப்பட்டுள்ளது. (கெ)

## கோட்டு விற்பனை விளம்பரம்

மல்லாக மாவட்ட நீதிமன்றம்

இல: சகு/1406

1. நடராசா ஜீவேஸ்வரா
2. பெண் அருந்தவச்செல்வம் 'திருவருள்வாசா', மாவிட்டபுரம், தெல்லிப்பழை —வழக்காளிகள்.

எதிராக

1. கனகசபாபதி ஞானசுந்தரம்
2. பெண் சிவபாக்கியம், தெல்லிப்பழை கிழக்கு, தெல்லிப்பழை. —எதிராளிகள்

மல்லாகம் டிஸ்திரிக் கோட்டின் 1406ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு கல்வீட்டை 1979ம் ஆண்டு மாசிமாதம் 14ந் திகதி [14-2-79] புதன்கிழமை 10 மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி 8250/-. 6-9-1976 தொடக்கம் 28-4-1977 வரைக்கும் 5000/-க்கு வருடம் ஒன்றுக்கு 20 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும் இறுக்கப்படும் வரை சட்ட வட்டியாக வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச் செலவு 671 ரூபா.

### ஆதன இடாப்பு

வடமாகாணம், யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப் பகுதி தெல்லிப்பழைக் கோவிற்பற்று வீமன்காமம் இறை, சௌமராவத்தையும் கல்நொங்கையும், நிலப்பரப்பு 7 (நி ப. 7) இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு நாலு (4) இதற்கு எல்லை கிழக்கு கனகரத்தினம் பெண் மங்கலபூபதியினுதனம், தெற்கு சிவபாதம் பெண் இராசேஸ்வரியினுதனம். மேற்கு கிருஷ்ணர் இராஜவல்லியர் பெண் கனகாம்பிகையினுதனம், வடக்கு ஒழுங்கை சிதம்பரப்பிள்ளை யினுதனமும், இதடங்கலும் இன்னும் கிணற்றுப் பங்கும் தூர்வைப் பங்கும் வழிவாய்க்காலும்.

மு. விஜயராஜன்
நீதிமன்ற விற்பனவு
விலை மதிப்பாளர்

கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.
25-1-1979

1607

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல சடு 271

தி அ. இராசையாபிள்ளை கைம்பெண் எலிசபெத் முத்தம்மா கரம்பன் தெற்கு ஊர்காவற்றுறை. —வழக்காளி

எதிராக

1. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளையும்
2. பெண் நகுலேஸ்வரியும் இருவரும் சரவணை மேற்கு ஊர்காவற்றுறை. —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் சடு 271ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் 1 துண்டுக் காணி, 1979ம் வருடம் பங்குனி மாதம் 26ந் திகதி திங்கட்கிழமை மு. ப. 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி ரூபாய் 5190/-ம் 11-10-76 தொடக்கம் 9-6-77 வரைக்கும் ரூபாய் 3000/-க்கு 18 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 562/-

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்றிக் தீவுப்பகுதி ஊர்காவற்றுறை கோவிற்பற்று சரவணை இறை ஆவிடையான் பிரிவு நிலபர 3 இது அளவின்படியும் ஆட்சிப் படியும் நில பர. [4] நாலும் வீடும், வேப்பும், தென்னைகளும், பனையும் எல்லை கிழக்கு சுப்பிரமணியம் பெண் பரமேஸ்வரியினுதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு கையொழுங்கை தெற்கு இளையதம்பி செல்வத்துரையின் ஆதனம் இதடங்கலும். முற்பதிவு இல: C 436/160

இ. கனகரத்தினம்,
கொமிஷனரும்
விலைமதிப்பாளரும்.

35/2, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

1608

---

## மரண அறிவித்தல்

### திருமதி தி. கனகம்மா

காலஞ்சென்ற தில்லைநாதரின் அன்பு மனைவி கனகம்மாவின் ஈமக்கிரியைகள் பெப்ரவரி மாதம் 14-ந் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு அன்னாரின் இல்லமாகிய 3-ம் நம்பர் சந்தனமாதா கோவில் ஒழுங்கை, சுண்டிக்குளியில் நடைபெறும்.

உற்றார் உறவினர்களை இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுவோர் :

மக்கள் : செல்வராசா, சுந்தரராசா, விவேகானந்தராசா, கணேசராசா, சிறிக்கந்தராசா, பிறேமாவதி, சரஸ்வதிதேவி, கமலாதேவி, பராசத்தி.

மருமக்கள் : தியாகராசா, திருலிங்கநாதன், நவரத்தினம், இந்திராதேவி, சர்மிஸ்ராதேவி, தவனேஸ்வரி, சிறிதேவி.

1606

---

## ஆழிக்குமரன் ஆனந்தனின் சாதனை நிகழ்ச்சியொன்று யாழ். நகரில் நடக்கும்

(யாழ்ப்பாணம்)

ஆழிக்குமரன் ஆனந்தன் நிகழ்த்திவரும் உலக சாதனை நிகழ்ச்சிகளில் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நிகழ்த்தத் திட்டமிட்டுள்ளார்.

தொடர்ந்து 'டுவிஸ்ட்' நடனம் ஆடுவதில் உலக சாதனையை முறியடித்து, புதிய சாதனையொன்றை அண்மையில் நிலை நாட்டிய ஆழிக்குமரன் ஆனந்தன் மேலும் பல உலகசாதனைகளை நிலைநாட்ட எண்ணியுள்ளார். ஏற்கனவே பாக்கு நீரிணையை மன்னார் கரையிலிருந்து நீந்திச் சென்று தனுஷ்கோடியை அடைந்து அங்கிருந்து அதே மூச்சில் இலங்கையின் கரைக்கு நீந்தியதின் மூலம் ஒரு நீச்சல் சாதனையையும் அவர் நிலை நிறுத்தியிருக்கிறார்.

திரு ஆனந்தனின் 9 வது அல்லது 10 வது சாதனை நிகழ்ச்சி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என்று அவர் அறிவித்துள்ளார்.

---

## வருடாந்த உற்சவம்

[சங்கானை]

பண்டத்தரிப்பு அம்மன் வீதி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகியது

தினமும் விசேட அபிஷேகங்களும் மேளக்கச்சேரிகளும் அம்பாள் வீதிவலம் வருதலும் நடைபெறுகின்றது.

பிரம்மஸ்ரீ ப. சிவபாலராஜ குருக்கள் பிரதம குருவாக இருந்து உற்சவத்தை நடாத்துகின்றார். [உ]

---

## ரூ.5000 பிணையில் லொறி உரிமையாளர்

[புலோலி]

உத்தரவுப் பத்திரமின்றி 7000 ரூபா பெறுமதியான பலகைகளை ஏற்றி வந்ததாக கூறப்படும் லொறி உரிமையாளர் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பருத்தித்துறைப் பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து சார்ஜன்ட் திரு. எஸ். மாணிக்கராசா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி புலோலியில் வைத்து 7000 ரூபா பெறுமதியான உத்தரவுப் பத்திரமற்ற பல கைகளுடன் லொறியையும் கைப்பற்றி பருத்தித்துறை பதில் நீதிபதி திரு. கே. பாலசுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

லொறியையும், உரிமையாளரையும் 5000 ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிபதி மேல் விசாரணையை ஒத்திவைத்தார். [உ]

---

## தாளையடி போக்குவரத்து வசதி

[புலோலி]

பருத்தித்துறைத் தேர்தற் தொகுதியின் கிழக்குப் பகுதியான தாளையடிப் பகுதியின் போக்குவரத்து வசதிகள் சீர் செய்யப்படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுவருகின்றன.

இதற்கு முன்னோடியாகப் பருத்தித்துறை-தாளையடி பிரதான வீதியை விஸ்தரிக்கும் பொருட்டு யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ இம்மாதம் 15ம் திகதி குடத்தனைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

யாழ். அரசாங்க அதிபருடன் யாழ். மாவட்ட நெடுஞ்சாலைகள் திணைக்கள பிரதம பொறியியலாளர், பருத்தித்துறை எம். பி, திரு க. துரைரத்தினம், பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும்மயிலும் ஆகியோரும் விஜயம்செய்து குடத்தனை அம்பன் ஆகிய இடங்களில் இப்பிரதான வீதியைவிஸ்தரிப்பதுபற்றிய ஆராய்வுகளை மேற்கொள்வர். [உ]

---

## பாண்டிருப்பை புனரமைக்க தொண்டர்படை செல்லும்

[மட்டுவில்]

கல்முனையில் புயலால்பாதிக்கப்பட்ட பாண்டிருப்புக் கிராமத்தை சாவகச்சேரிப் புயல் நிவாரணசபைபொறுப்பேற்று புனரமைப்புச்செய்யும். ஆரம்பத்தில் மண்டூர் கிராமத்தில் ஐந்நூறு வீடுகளை இச்சபை புனரமைப்புச்செய்து கொடுத்துள்ளது.

சாவகச்சேரி எம். பீ. திரு. வி. என். நவரத்தினம்தலைமையில் இயங்கும் இந்தச்சபை தனது தொண்டர்களை மீண்டும் புனரமைப்பு வேலைக்காக மட்டக்களப்புக்கு அனுப்புவதெனத் தீர்மானித்துள்ளது

சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இச்சபையின் ஆலோசனைக்கூட்டத்தில் இவ்வாறு தீர்மானிக்கப்பட்டது.

இம்மாத இறுதிக்குள் இப் புனரமைப்பு வேலைகளுக்குத் தொண்டர்கள் அனுப்பப்படுவர். [உ]

---

## "ஆசிரியர் வேலைநீக்க உத்தரவை வாபஸ் பெறுக"

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளுக்கு 1-2-79 முதல் 7-2-79 வரை சமுகமளிக்கவில்லை என்ற காரணத்தால் வேலையை இழந்தவர்களாகக் கருதப்பட்டு வடமாநிலக் கல்விப் பணிப்பாளரால் விடுக்கப் பட்ட கடிதங்களை வாபஸ் பெறும்படியும் பிரஸ்தாப ஆசிரியர்களை உடனடியாக வேலைக்கு அமர்த்தும்படியும் அரசாங்க லிகிதர் சேவைச் சங்க யாழ். கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பின்வரும் தீர்மானங்களும் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

பாடசாலைப் பகிஷ்கரிப்புச் சம்பந்தமாக கல்வித்திணைக்களத்தினுல் அவசரப்பட்டு அனுப்பப்பட்ட சுற்றுநிருபங்கள அறிக்கைகள் யாவையும் வாபஸ்பெறவேண்டும்.

பகிஷ்கரிப்பு காரணமாக பாடசாலைக்குச்செல்லாதிருந்த சகல மாணவர்களையும் நிபந்தனையின்றி பாடசாலையில் அனுமதிக்கவேண்டும்.

தரப்படுத்தலை நீக்கி பல்கலைக் கழக கல்விக்குத் தகுதி வாய்ந்த அனைவருக்கும் பல்கலைக் கழகங்களில் சேர்ந்து படிக்க வசதியளிக்கவேண்டும்

கல்வி அமைச்சருக்கும் வடமாநிலக் கல்விப் பணிப்பாளருக்கும் மேற்படி தீர்மானங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. [உ]

---

## கந்தபுராணப படிப்பு

(யாழ்ப்பாணம்)

வண்ணை சாந்தையர் மடம் கற்பகவிநாயகர் கோவிலில் கந்தப்புராண படனம் நேற்று முன்தினம் முதல் நடைபெற்று வருகிறது. (உ)

0 0 0

(புலோலி)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவைச் சித்திவிநாயகர் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு கடந்த ம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் நடைபெற்று வருகிறது

அமரர் அகிலேசர் ஞாபகார்த்தமாக தேவஸ்தான பரிபாலன சபை ஆதரவில் சென்ற வருடம் முதல் இப் படிப்பு நடைபெற்று வருகிறது இம்முறை விசேட தினங்களில் சைவசமய [illegible] ணபடன விற்பன்னர் [illegible] லருப கலந்து கொ[illegible] வதற்கான ஒழுங்குகளை பரிபாலன சபையினர் மேற்கொண்டுள்ளனர்.

---

## வரி விளம்பரம்

### தேவை

காவத்தை, நீலகாமம் ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்துக்கு முக்காலப்பூசை செய்யக்கூடியவரும், தேவஸ்தான விடுதியில் குடும்பத்துடன் வசிக்கக்கூடியவருமான பிராமணக் குருக்கள் ஒருவர் தேவை கோரும் வேதனத்தையும், சேவைக்கான சான்றிதழ்களையும், கடிதமூலமோ, அல்லது நேரடியாகவோ தொடர்பு கொள்க த. வெ. அரசு, தேவஸ்தான பரிபாலன சபைத்தலைவர், பெல்மதுளை, அரச பயிர்ச் செய்கை, காவத்தை. 1610

### விற்பனைக்கு

கோண்டாவில் பஸ் டிப்போவுக்கு அருகாமையில் கிணற்றுடன் 4 பரப்பு காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு; செ. செல்வரத்தினம், உரும்பராய் தெற்கு, உரும்பிராய். 1609

### அடைவு நகைகள் ஏல விற்பனவு விளம்பரம்

தொல்புரம் இ. துரையப்பா அன் சன்ஸ் அடைவு கடையில் 27-12-75 தொடக்கம் 3-7-77 வரை அடைவு வைத்துமீட்கப் படாத நகைகளை 27-2-79ல் செவ்வாய்க்கிழமை மு. ப 8 மணி முதல் மேற்படி கடையில் வைத்து பகிரங்கஏலத்தில என்னுல் விற்கப்படும்.

சி. செ. மாரிமுத்து,
நீதிமன்றங்களின் விற்பனை ஆணையாளரும், விலைமதிப்பாளரும், ஏலத்தாரரும்
விதானை வளவு, சித்தங்கேணி. 27-1-1979. 1479

---

## 'அண்ணாவின் அரசியல் சாணக்கியம்'

[யாழ்ப்பாணம்]

"தமிழக அரசுக்கு நகல் தபால் தலையைக் காண்பித்து அதன் முன் ஒப்புதல் பெறப்பட்ட பின்பே இந்திய மத்திய அரசு இரண்டாவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் நினைவாக வெளியிட்டிருந்த தபால் தலையை அச்சேற்றியிருந்தது என்பதை நன்கு அறிந்திருந்தும் மாநாட்டில் பங்கு பற்றுவதற்காக சென்னைக்கு வருகை தந்திருந்த வெளிநாட்டுப் பிரமுகர்களுக்கு தமிழ்நாட்டில் நிலவும் இந்தி [illegible] வெளிக்காட்ட வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கி நின்றதால் பேரறிஞர் அண்ணா தமிழக முதல்வர் என்ற [illegible]காதாவில்

(6-ம் பக்கம் பார்க்க)

# யாழ். பல்கலைக்கழகம்பற்றி பிரதமர் தேசாய் வினவினர்

## 'வித்தி' பாராட்டுவைபவத்தில் 'அமிர்' வெளியிட்டதகவல்

### "வித்தியானந்தன் நமக்குக்கிடைத்தது தமிழினம் செய்த பேறு!"

[யாழ்ப்பாணம்[

"இலங்கைக்கு விஜயம் செய்திருந்த பாரதப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயை நான் ஜனாதிபதி மாளிகையில் சந்தித்து பல விஷயங்கள் குறித்தும்உரையாடிக்கொண்டிருந்த போது, ஒரு கட்டத்தில், நமது கல்வித்துறை பற்றியும் வினவினர். நாட்டிலுள்ள பல்கலைக்கழகங்கள்பற்றி பிரஸ்தாபிக்கப்பட்டபோது; யாழ்ப்பாண பல்கலைக்கழகம் பற்றியும் பேசினோம்.

"உங்கள் பகுதியில்தானே ஒரு தனியான பல்கலைக்கழகம் உங்களுக்கென்று இருப்பதாகக் கூறுகின்றீர்களே..." என்றார் பிரதமர் மொரார்ஜி. அப்பொழுது நான் சொன்னேன்—

"பெயருக்கு ஒரு பல்கலைக் கழகம் எங்கள் பகுதியில் இருக்கிறதே தவிர, மாணவர்களைத் தேர்ந்தெடுப்பது, அனுமதிப்பது, நிராகரிப்பது போன்ற சகல அதிகாரங்களும் அரசின் கையில்தான் என்று தெரிவித்தேன்."

இவ்வாறுநேற்று முன்தினம் யாழ். நகரிலுள்ள விருந்தினர் விடுதியொன்றில், யாழ் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் சு. வித்தியானந்தனுக்கு அளிக்கப்பட்ட பகல் விருந்துபசாரத்தில் எதிர்க்கட்சித்தலைவரும், கூட்டணிச் செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் கூறினர்.

#### மன்றம் கௌரவித்தது

அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றத்தின் இலங்கை கிளைத்தலைவரான பேராசிரியர் சு. வித்தியானந்தன், யாழ். பல்கலைக்கழக உபவேந்தராக நியமனம் பெற்றதைப் பாராட்டி, அ. த மன்றத்தின் இலங்கைக் கிளையினர் இந்த விருந்துபசாரத்தை அளித்துக் கௌரவித்தனர். இவ்வைபவத்துக்கு வண. தனிநாயகம் அடிகளார் தலைமை வகித்தார்.

#### குருவும் மாணவனும்

திரு அ. அமிர்தலிங்கம் தொடர்ந்து பேசுகையில்; "பேராசிரியர் சு வித்தியானந்தன் எனது பல்கலைக்கழக குரு. நான் அவரது மாணவன்" என்றார். அவர்மேலும் கூறியதாவது;

"1945 ம் ஆண்டில், நான் பல்கலைக்கழகத்தில் சேர்ந்த காலத்தில் எனது விரிவுரையாளராக திரு. சு. வித்தியானந்தன் கடமையாற்றினர். இவரிடம் மட்டுமன்றி சுவாமி விபுலானந்தர், பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆகியோரிடமும் பல்கலைக் கழகத்தில் நான் விரிவுரைகள் பெற்றது-நான் செய்த தவப்பயன் என்றுதான் நினைக்கிறேன்.

#### நாடகத் தமிழை வளர்த்தார்

"அந்தக் காலத்திலேயே, பல்கலைக்கழக மாணவர்கள் மத்தியில் நாடகத் தமிழை வளர்த்த பெருமை திரு. வித்தியானந்தனைச்சாரும். அவரது நாடகங்களில் நான் நடித்ததுண்டு. நாடகத்துறையில் மட்டுமின்றி உயர்கல்வி விஷயத்திலும் புதிய முறைகளைப் புகுத்தி, காலத்துக்கேற்ற முறையில் வேண்டிய மாற்றங்களைச் செய்தவர். திரு. வித்தியானந்தன் நமக்குக்கிடைத்தது தமிழினம் செய்த பேறு என்று தான் நான் கூறுவேன்.

#### தமிழாராய்ச்சி மகாநாட்டின்போது

"யாழ்ப்பாணத்தில் தமிழாராய்ச்சிமகாநாடு நடைபெற்றபோது, எத்தனையோ எதிர்ப்புகள் பொலிஸ் நடவடிக்கைகள் மத்தியில் திரு. வித்தியானந்தன் ஆற்றிய சேவையை தமிழினம் மறக்கமுடியாது. எரிந்து கொண்டிருக்கிற கப்பலை விட்டு, வெளியேறவிரும்பாத ஒரு இளைஞனை அப்பொழுது நினைவூட்டினர் திரு. வித்தியானந்தன் குறிபார்க்கப்பட்ட சில நண்பர்களைப் பாதுகாத்து மேடையைவிட்டு அவர் அகலாமல் நின்ற காட்சி இன்றும் எனது நெஞ்சில் பசுமையாக நிற்கிறது

"நமது இனம் இன்று எத்தனையோ சோதனைகளை எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறது, கல்வித்துறை நமது குழந்தைகளின் கல்வித்திறமைக்கு ஒரு சவாலாக நிற்கிறது. தமிழினம் அரசியல், சமூதாய வேற்றுமைகளை மறந்து, எமது எதிர்காலச் சுபிட்சத்துக்காக ஒன்றுபட்டு நிற்கவேண்டும்."

#### தனிநாயகம் அடிகளார்

வண. தனிநாயகம் அடிகளார் பற்றி திரு. அமிர்தலிங்கம் குறிப்பிடுகையில், "உலகில் தமிழன் பெருமையை உணரச் செய்தவர்களில் வண. தனிநாயகம் அடிகளாரும் ஒருவர் நமக்குக் கிடைத்த ஒரு மாணிக்கம்" என்றார்.

#### 'வித்தி' நன்றி

பேராசிரியர் சு. வித்தியானந்தன் நன்றிதெரிவித்துப் பேசுகையில்; இன்று, சர்வதேசரீதியில் தமிழரின்மொழி, சமூதாயம், பண்பு பற்றி விரிவாக ஆராயப்பட்டு வருகிறதென்றால் அதற்குக் காரணம்-அனைத்துலகத் தமிழாராய்ச்சி மன்றம்தான் என்றார்.

#### மாநாட்டு எதிரொலி

"இலங்கையில் 1974ல் நடைபெற்ற நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டின் எதிரொலியாகத்தான், ஈழத் தமிழரின் அவலநிலை உலகுக்குத் தெரியவந்தது. நமக்காக உயிர் நீத்த அந்தத் தியாக நெஞ்சங்களை நமது இனம் மறக்கமுடியாது நமது இனம் இன்று சோதனைக் குள்ளாக்கப்பட்டிருக்கின்றது. இந்த நிலையில், எம்மிடையே நிலையான ஐக்கியம் நீடிக்க வேண்டும்" என்றார்.

#### வந்திருந்த பிரமுகர்கள்

இவ்வைபவத்தில் வண. தனிநாயகம் அடிகளார், திரு ச அம்பிகைபாகன், திரு. சச்சிதானந்தன் ஆகியோரும், பேராசிரியர் வித்தியானந்தனின் தமிழ்ப் பற்று, அவர் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு பற்றி விரிவாக உரையாற்றிப் புகழ்மாலை சூடினர்.

எம். பி க்கள் திருவாளர்கள் எம். சிவசிதம்பரம், வெ. யோகேஸ்வரன், வி. தர்மலிங்கம், பண்டிதர் கா. பொ. இரத்தினம், எஸ். கதிரவேலுப்பிள்ளை மற்றும் யாழ்மாவட்ட நீதிபதி திரு. ஜே. ஜி ஆசீர்வாதம், கட்டடக் கலைஞர் திரு. வி எஸ். துரைராஜா, திரு. ஜேம்ஸ் இரத்தினம், டாக்டர் இந்திரபாலா, திரு குமார் பொன்னம்பலம், வடமாநில வித்தியாதிபதி திரு தி. மாணிக்கவாசகர் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கல்வித்துறையினர் ஆகிய பல்துறைப்பிரிவினரும் 'வித்தி'க்கு அளிக்கப்பட்ட இந்த விருந்துபசாரத்தில் பெருமளவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

---

'அமரர் ஜி.ஜி.

## இந்தியா, மலேஷியாவிலும் புகழ்பெற்று விளங்கினர்"

[கொழும்பு]

"35 வருடங்களாகத் தொடர்ந்து சட்டத்துறையில் தமது வாதத்திறமையால் கொடிகட்டிப் பறந்தார் அமரர் ஜி ஜி பொன்னம்பலம். விசேடமாக அவர் குற்றவியல் வழக்குகளில் பெரும் வாதத் திறமையைக் காட்டினர்."

கொழும்பு சட்டநூல் நிலையத்தில் அமரர் ஜி ஜி பொன்னம்பலத்தின் வெங்கலச்சிலை திறப்புவிழாவில் பேசிய சிரேஷ்ட சட்டத்தரணி திரு சிறில் பெரேரா கியூ. ஸி. மேற்கண்டவாறு கூறினர்.

பிரதம நீதியரசர் திரு நெவில் சமரக்கோன், அமரர் ஜி ஜி யின் சிலையைத் திறந்து வைத்தார்

சட்டத்தரணி சிறில் பெரேரா மேலும் கூறியதாவது:- ஸ்கொட்லண்ட்யாட் சட்டத்தரணிகளால்கூடப்புகழ்ப்பெற்ற அன்ன குறுக்குவிசாரணை செய்வதில், அமரர் ஜி ஜி மன்னனாக விளங்கினர். அவர் மறைவு சட்டத்துறைக்கு பேரிழப்பாகும்.

சட்டத்துறையில் உலகில் பல இடங்களிலும் அவர் புகழ் பெற்று விளங்கினர். இந்தியா, மலேசியா ஆகிய நாடுகளிலும் மிகவும் புகழ்பெற்று விளங்கினர், அரசியல் துறையில் நுழைந்த அவர் அதிலும் வெற்றிகண்டு உயர்ந்த நிலையை அடைந்தார்,

சிரேஷ்ட சட்டத்தரணிசாம் சதிர்காமர் கியூ சி பேசுகையில், அமரர் ஜி ஜி எதிர்ப்புறத்தில் வாதாடும் சட்டத்தரணிகள் பாராட்டும் அளவுக்கு வாதாடினர் என்றார்,

இவ்விழாவில் முன்னாள் அமைச்சர்களான திருவாளர்கள் என், எம், பெரேரா, கொல்வின் ஆர். டி. சில்வா. ஹெக்டர் கொப்பகடுவர், செ, குமாரசூரியர், சேர் ராசிக் பரீத், சட்டமா அதிபர் திரு, சிவா பசுபதி, மற்றும் சட்டத்தரணிகளும் பிரமுகர்களும் கலந்துகொண்டனர் [க[

---

## சமுதாயப்பணியில் சட்டத்தரணிகள் பங்கு

[உடுப்பிட்டி]

"இன்றுள்ள பல்வேறு விதமான அரசியல் கொந்தளிப்புகளுக்கும், பயங்கரக் குற்றங்களுக்கும் தேசிய இனங்களின் பிரச்னைகளுக்கும் தீர்வுகாண வேண்டுமாயின் சட்டத்தரணிகள் சமுதாய வாழ்வில் முக்கியபங்கை வகிக்கவேண்டும்"

இவ்வாறு இவ்வாண்டு அகில

---

# மக்கள் கருத்து

## இறுதி ஆண்டுப்பரீட்சையை இவர்களே நடத்த வழிசெய்க

இலங்கையில் முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்டதும் மிகவும் பழைமை வாய்ந்த வைத்தியக் கல்லூரியுமாகிய யாழ்ப்பாணம் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியின் நிர்வாகம் புனரமைப்புச் செய்யப்பட்டு புதிய இயக்குநர் சபையின்கீழ் செயல்பட்டு வருகிறது. இக்கல்லூரியின் அதிபராக முதுபெரும் வைத்திய அறிஞர் டாக்டர் ஆர். ஈ. டபிள்யூ. ஜெயசேகரத்தினமும் பதிவாளராக டாக்டர் வி. கே. விஸ்வலிங்கமும் உப அதிபராக டாக்டர் மகேஸ்வரனும் இயக்குநர் சபையின் செயலாளராக டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பியும் செயல்பட்டு வருவதுடன் ஆற்றலும் திறமையும் மிக்க விரிவுரையாளர்களின் கல்விப் போதனையால் இக்கல்லூரி தரத்தில் முதன்மையாகவும் விளங்குகிறது இக்கல்லூரியை மேம்படுத்துவதற்கென பல திட்டங்களை நிர்வாகம் வகுத்துச் செயல்படுத்தி வருகின்றது. மருந்தக அபிவிருத்தி, மின்சாரம் இல்லாத குறைபாடு விரிவுரைகளில் ஒழுங்கீனம் போன்றவை நிவர்த்தி செய்யப்பட்டுவிட்டன!

நிலைமை இவ்வாறு இருந்தும் இக் கல்லூரியை அரசு மாற்றாந்தாய் மனப்பான்மையுடனே நடத்தி வருகின்றது. நான்கு ஆண்டுகளுக்கு முன்பு அரசினால் நடத்தப்பட்ட இறுதி ஆண்டுப்பரீட்சைகளின் முடிவுகள் இன்னமும் வெளியிடப்படவில்லை. இதன் பின்னர் வெளியேறியோருக்கு இறுதி ஆண்டுப்பரீட்சைகள் இதுவரை நடத்தப்படவில்லை. மேலும் மேலும் புதிய ஆண்டுகளில் நூற்றுக்கணக்கான மாணவ மாணவிகளுக்கு இக் கல்லூரியில் பிரவேசம் வழங்கப்படுகிறது. இக்கல்லூரிக்கு எத்தனையோ அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், ஆயுர்வேத ஆணையாளர்கள், அரசினர் ஆயுர்வேத வைத்தியசபை உறுப்பினர்கள், தென்இலங்கை வைத்திய சங்கங்களின் பிரதிநிதிகள் காலத்திற்கு காலம் வருகை தந்து வாக்குறுதிகளைத் தந்தும் சென்றனரெனினும் ஒன்றையேனும் நிறைவேற்றமல் விட்டனர். இதனால் மாணவர்களும் விரிவுரையாளர்களும் கல்லூரி நிர்வாகமும் ஏமாற்றத்திற்குள்ளாகியுள்ளனர்.

இறுதி ஆண்டுப் பரீட்சைகளின் முடிவுகளை நான்கு ஆண்டுகள் சென்றும் வெளிவிடாமல் இறுதி ஆண்டுப் பரீட்சைகளையும் நடத்தாமல் காலத்தை கடத்தும் ஆயுர்வேதத் திணைக்களத்தினர் இறுதி ஆண்டுப் பரீட்சைகளை இக்கல்லூரியே நடாத்தவும் பரீட்சையை அங்கீகரிக்கவும் நடவடிக்கை எடுப்பதே மிகவும் சிறந்ததாகும்.

எனவே இறுதி ஆண்டுப் பரீட்சைகளை இக்கல்லூரியினர் நடத்த ஏற்றஒழுங்குகளைச் செய்வதற்குக் கல்லூரி நிர்வாகமும், இப்பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்களும், எதிர்க்கட்சித் தலைவரும் சுகாதார அமைச்சரும் ஆயுர்வேத ஆணையாளரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என விரும்புகிறோம்.

டாக்டர் கே. வி. கே. திருலோகமூர்த்தி
(இணைச்செயலாளர்)
ஊர்காவற்றுறைத்தொகுதி ஆயுர்வேத வைத்திய சங்கம்
நாரந்தனை.

0 0 0

---

இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் தேர்தலில் போட்டியிடும் பருத்தித்துறை நீதிமன்றச் சட்டத்தரணிகளில் ஒருவரான திரு கந்தையா பிள்ளையினர் விடுத்துள்ள பகிரங்க வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது கொள்கைகளை விளக்கி சகல சட்டத்தரணிகளுக்கும் சுற்றுநிருபம் அனுப்பிவைத்துள்ளார். [உ]

---

## நியமனத்தில் தாமதம் ஏன்?

இனமத சாதி பேதமில்லாத தார்மிக ஆட்சி நடாத்தும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன யாழ் மாவட்ட மந்திரி நியமனத்தை உடனடியாகச் செய்யவேண்டும் என்பது வடபகுதி ஐ. தே. க ஆதரவாளர் வேண்டுகோளாகும்.

இதுவரை இந்த நியமனத்தை செய்யாமல் இருப்பதால் - தமிழ் மக்கள் கவலையும் பாதிப்பும் அடைந்துள்ளனர். தொழில்கள், தொழில்வாய்ப்பு முன்னேற்றம் எல்லாம் மாவட்ட ரீதியாகத் தடைபட்டுள்ளன.

அரசு உள்ளூராட்சி தேர்தல்களை மே மாதம் தொடக்கம் நடாத்த இருப்பதால். மாவட்ட மந்திரியின் நியமனத்தை உடனடியாக செய்தல்வேண்டும். மாவட்ட மந்திரியின் நியமனத்தை அரசு பின்போடுமாயின் உலக அரங்கில்-தமிமக்களை பிரித்துக்காட்டும் முறையை வெளிக்காட்டும் அத்துடன் கூட்டணியின் ஈழக் கோரிக்கை பலப்படுவதும் ஒரு செயலாகும்.

எனவே மாண்புமிகு ஜனதிபதி இதனை உடனடியாக கவனத்திற்கு எடுத்து யாழ். மாவட்ட அமைச்சரை நியமிக்கவேண்டும்.

எஸ். எஸ். சிவகுருநாதன்,
கீரிமலை வீதி,
காங்கேசன்துறை.

---

## எம். பி.யிடம் கோரிக்கை

[புலோலி]

பருத்தித்துறைத் தொகுதியிலுள்ள வராத்துப்பளை, உதிராவத்தை, பல்லப்பை ஆகிய இடங்களுக்கு மின்சார சபையின் கிராமிய மின் விஸ்தரிப்புத் திட்டத்தின் கீழ் மின் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை ஈஸ்வரா இளைஞர் நன்னெறிக் கழகத் தலைவர் ஏ. என். எஸ். திருச்செல்வம் பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்தை மகஜர் மூலம் கோரியுள்ளார்

இக்கிராம விவசாயிகளின் விவசாயத் தேவைகளுக்கு மின்சாரம் இன்றியமையாததாக இருப்பதுடன் பொதுமக்களின் மின்சாரத்தேவைகளுக்கும் இம் மின்திட்டத்தை ஆரம்பிப்பதன்மூலம் விமோசனமளிக்க வேண்டுமென்றும் இம் மகஜரில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (உ)

# ஈரானின் 5 வாரகால அரசு கலைக்கப்பட்டது:

# பஸர்கானிடம் ஆட்சிப்பொறுப்பு

## பக்தியார் தற்கொலை, சமயத்தலைவரின் ஆதரவாளர்கள் மகிழ்ச்சி ஆரவாரம்

தெஹ்ரான், பெப். 12

ஈரான் மன்னர் ஷாவின் பிரதிநிதியான ஈரான் பிரதமர் டாக்டர் பக்தியாரின் 5 வாரகால அரசு ராஜினமாச் செய்து பாராளுமன்றமும் கலைக்கப்பட்டது.

இதேவேளையில் இஸ்லாமிய சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனியினுல் நியமிக்கப்பட்ட பிரதம மந்திரி டாக்டர் பஸர்கானின் ஆதிக்கம் கையோங்கியுள்ளது.

பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ள டாக்டர் பக்தியார் தற்கொலை செய்துகொண்டாரென்று ஈரான் செய்தியொன்று தெரிவிக்கின்றது.

ஈரான் இராணுவத்திற்கும் அயத்தொல்லாகொமேனியின் ஆதரவாளர்களுக்கு மிடையே கடந்த இரண்டு நாட்களாக நடைபெற்ற கடும்சண்டையைத் தொடர்ந்து சகல துருப்புக்களையும் தத்தமது முகாம்களுக்குத் திரும்புமாறு பிரதம இராணுவ அதிகாரி உத்தரவிட்டதையடுத்தே டாக்டர் பக்தியார் தமது பதவியை ராஜினமாச் செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டது.

### 200 பேர் பலி!

கடந்த இரண்டு நாட்களாக இடம்பெற்ற கலவரங்களில் 200 பேர் பலியாகினரென்றும் 400பேர்வரை படுகாயமடைந்தனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இதேவேளையில் ஆட்சியைப் பொறுப்பேற்றுள்ள டாக்டர் பஸர்கான் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள வேண்டுகோளில், ஒழுங்கையும் அமைதியையும் காக்குமாறும் கேட்டுள்ளார்.

### இராணுவத்தைக் கொலைசெய்யாதீர்

இராணுவவீரர்களைக்கொலை செய்யவேண்டாமென்றும் அரசாங்கக் கட்டிடங்களைச் சேதப்படுத்த வேண்டாமென்றும் டாக்டர் பஸர்கான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டில் அமைதி காத்து நிர்வாகம் சீரடைய உதவுமாறு சமயத் தலைவர் அயத்தொல்லா கொமேனிமக்களைக் கேட்டுள்ளார்.

### விமானநிலையங்கள் மூடப்பட்டன

இதேசமயம், ஈரானின்சகல விமான நிலையங்களும், எல்லைகளும் 24 மணித்தியாலங்களுக்கு மூடப்பட்டுள்ளன.

டாக்டர் பக்தியாரின் ஆட்சி கலைக்கப்பட்டதையடுத்து அயத்தொல்லாகொமேனியின் ஆதரவாளர்கள் வீதிகளில் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்

### இஸ்ரேலிய தூதரகம் தீக்கிரை!

இதேசமயம் நேற்றைய கலவரங்களின் போது தெஹ்ரானிலுள்ள இஸ்ரேலிய தூதரகம் தீக்கிரையாக்கப்பட்டதென்னும் அறிவிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க ஈரானின் தற்போதைய பிரதமர் டாக்டர் பஸர்கான் தலைமை இராணுவ அதிகாரியைச் சந்தித்து பேச்சுநடத்தினரென்றும் இப்பேச்சுக்களை அடுத்தே இராணுவத்தலைமை அதிகாரி தமது இராணுவப் படைவீரர்களை முகாமுக்குத் திரும்புமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிகிறது. [இ]

## குரு ரவிதாஸ் பிறந்ததினவிழா

புதுடில்லி, பெப். 12

15ம் நூற்றுண்டில் இந்தியாவில் வாழ்ந்த குருரவிதாஸின் பிறந்ததினவிழா இன்று இந்தியா முழுவதும் வெகுசிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

## பொலிஸ் நிலையங்கள் கைமாறின?

தெஹ்ரான், பெப். 11

தெஹ்ரானில் எட்டு பொலிஸ் நிலையங்கள் சமயத் தலைவர் கொமெய்னியின்ஆதரவாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக உத்தியோகபூர்வமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

இரவு பூராவும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டபடியே இருந்ததாக அறிவிக்கப்படுகிறது. [உ]

# இனஒதுக்கலை எதிர்த்து சர்வதேசக்கமிஷன் விசாரணை ஆரம்பம்

பிரஸ்ஸல்ஸ், பெப். 12

தென்னுபிரிக்காவில் இனவாதம் நடத்தும் அட்டூழியங்கள் பற்றிய சர்வதேச விசாரணைக் கமிஷனின் கூட்டம் பிரஸ்ஸல்ஸில் ஆரம்பமாகியுள்ளது.

தென்னுபிரிக்காவில் குடியேற்ற ஆட்சிமுறையைக்கலைப்பது பற்றிய ஐ. நா. சபையின் தீர்மானங்களை அமுல் படுத்துவதை ஆதரிக்குமுகமாகவே இந்த சர்வதேச கமிஷன் நிறுவப்பட்டுள்ளது.

இச்சர்வதேச கமிஷனுக்கு நீதிமன்றத்தின் அதிகாரபலம் இல்லாதுபோனுலும் அதன் தார்மீக செல்வாக்கு கணிசமானது.

பிரபல நீதிபதிகள், சட்ட நிபுணர்கள், மதத்துறை பிரபலஸ்தர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட இச்சபை [பல்வேறு அரசியல் சித்தாந்த, சமயவிசுவாசம் கொண்ட மேற்குஐரோப்பிய பொதுஜன ஸ்தாபனங்களின் கூட்டுமுயற்சியால்உருவாக்கப் பட்டதொன்றாகும்

அணு, விண் யுகத்தில் இனவாதம் தலைவிரித்தாட அனுமதிக்கமுடியாது. அது மனிதனின்மனச்சாட்சியைஅரித்துக் கொல்லும் புற்றுநோய்போன்றதென்று கமிஷன் கருதுகிறது. வர்ணரீதியாக தோல் கறுப்பாய் இருப்பதை வைத்து இந்தவெட்கக்கேடான அடிமைமுறை உத்தியோக அந்தஸ்து பெற்றிருப்பது மட்டந்தட்டப் படவேண்டியதொன்று என்றும் கமிஷன் கூறுகிறது.

### 5லட்சம் அரசியல் கைதிகள்

பிரிட்டோரியாவிலும் [தென்னுபிரிக்கா] ஸாலிஸ்பரியிலும் [ரொடீஷியா] வருடந்தோறும் புதுப்புதுஅட்டூழியங்கள் நடத்தப்படுகின்றன. அங்கே அரசியல் எதிரிகள் நீதிமன்றங்களுக்கு அப்பால் வைத்துத் தண்டிக்கப்படும் அநியாயம் நிகழ்கிறது. மனிதனின் சுயகௌரவம் அதிகார பலத்தால் மிதிக்கப்படுகிறது. இவை அனைத்தும் ஐ. நா. சாஸனத்தையும், ஐ. நா. பிரகடனங்களையும் மீறுவதாக உள்ளன. உத்தியோகபூர்வமான புள்ளிவிபரங்களின்படி தென்னுபிரிக்காவில் 6 லட்சம் அரசியல் கைதிகள் சிறையில் வாடுகின்றனர். இது தென்னுபிரிக்காவில் ஆரம்பக் கல்வி பெறும் கறுப்பு ஆபிரிக்கர்களின் தொகையை விட அதிகம் என்று கமிஷன் அறிவித்துள்ளது. இதில் ஆபிரிக்க ஐக்கிய ஸ்தாபனத்தால் அங்கீகரிக்கப்பட்ட ஆபிரிக்க தேசிய காங்கிரஸின் தலைவர் நெல்ஸன் மண்டேலாவும் ஒருவராகும்.

தென்னுபிரிக்காவிலும்ரொடீஷியாவிலும் நமீபியாவிலும் சிறு குழந்தைகள் கூடசிறை வைக்கப்பட்டிருக்கின்றனர்.

தென்னுபிரிக்கா நிலவரம் உக்கிரமடைந்து வரும் இன்றைய கட்டத்தில் சர்வதேசக் கமிஷன் இங்கு கூடுவது முக்கியமானதென்று கருதப்படுகிறது. (இ)




# மிளகாய்

## இலைச் சுருளை தடுக்கிறது விளைச்சலை அதிகரிக்கிறது

## 'அக்டெலிக் 50'




பாவிக்கும் முறை

4-6 கலன் நீரில் 1 திரவ அவு. 'அக்டெலிக் 50' கலந்து 10 நாட்களுக்கு ஒருமுறை தெளிக்கவும்.

மேலும் விபரங்களுக்குத் தொடர்பு கொள்க,

CIC கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,

4-ம் மாடி,ஹேமாஸ் கட்டடம் கொழும்பு 1.


## இந்திய வெளியுறவு அமைச்சரின் சரித்திர சீன விஜயம்

### 7 நாட்கள் தங்கியிருந்து தீராதபிரச்னைகள் குறித்துப் பேசுவார்

புதுடில்லி, பெப். 12

இந்திய வெளிநாட்டு அமைச்சர் திரு. ஏ. பி. வாஜ்பாய் சீனவில் இன்று முதல் தமது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு வார உத்தியோகபூர்வ விஜயத்தை ஆரம்பிக்கிறார்,

இன்று முற்பகல் பம்பாயிலிருந்து திரு. வாஜ்பாய் பீக்கிங் பயணமானுர்.

சீன-இந்திய யுத்தத்தின் பின் சீனவுக்குச் செல்லும் முதலாவது இந்திய அமைச்சர் திரு. வாஜ்பாய் ஆவா.

இதுவரை தீர்க்கப்படாத இந்திய-சீனப் பிரச்னைகள் குறித்து இவர் சீனத் தலைவர்களுடன் பேச்சு நடத்துவார்.

### சீனவின் விசேஷ செய்தி

சீனவுக்குப் புறப்படுவதற்கு முன்னர் திரு. வாஜ்பாய்க்கு இந்தியாவிலுள்ள சீனத் தூதுவர் மூலம் சீன அரசு விசேஷ செய்தியொன்றை அனுப்பியுள்ளது.

திரு. வாஜ்பாயை அன்புடன் வரவேற்பதற்கான ஏற்பாடுகள் பீகிங்ல் நடைபெற்று வருகின்றன என்றே அவ் விசேட செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்ததாம். (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி, ஞாயிறு 2-30
கண்ணாடி
மாளிகை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சனி, ஞாயிறு 2-45
எம். ஜி. ஆர் - பத்மினி
விக்கிரமாதித்தன்

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர்.—விஜயகுமாரி
நீங்காத நினைவு

லிடோ
விஜயகுமார் - ஸ்ரீவித்யா - தங்கவேலு
(யாழ். நகர்)
ஆசை அறுபதுநாள்

மனோகரா
(யாழ்நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - உஷாநந்தினி
ராஜபார்ட் ரங்கதுரை
(புதியபிரதி) (கலர்)

மகத்தான 2-வது மாதம்
ஸ்ரீதர்
(யாழ்நகர்) தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் - சுஜாதா நடித்த
உயர்ந்தவர்கள்

5-வது வெற்றி வாரம்
தினசரி 4 காட்சிகள்
ராஜா
(யாழ்நகர்)
விஜயகுமார், ஜெயசித்திரா, நாகேஷ், சுந்தரராஜன் நடித்த
பயணம்

8-வது வாரம்
வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன் 466
தினசரி 5 காட்சிகள்
10-00, 1-00, 3-45, 6-45, 9-45
பைலட் பிரேம்நாத்
(ஈஸ்ட்மன் கலர்)

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஸ்ரீகாந்த் - லக்ஷ்மி
நடித்த
ஜெயகாந்தனின்
ஒரு நடிகை நாடகம் பார்க்கிறுள்
டைரக்ஷன் ; A. பீம்சிங்

REGAL Daily 1-30, 4-30, 7-00 & 9-30 p.m.
(Jaffna)
REVENGE
(Color)
Next Attraction
SO DARLING SO DEADLY

SHANTHI-Jaffna- Phone-7642
Daily 10-30, 2-30, 4-45, 7-00, & 9-30
MICHAEL YORK AND HIDEMI AOKI
SEVEN NIGHTS IN JAPAN
More Suitable for Adu'ts — Eastman Color
உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் இனிய இசையும், வண்ண ஒளியில் யப்பானின் எழில் உங்கள் கண்களுக்கு அரிய விருந்தாகும்.

## இன்றைய இராசிப்பலன்

மாசி மாதம் 1-ம் திகதி
செவ்வாய்க்கிழமை
(13 2-79)

**மேடம்:-** புண்ணிய காரியங்களில் விருப்பு ஏற்படும், பிதாவழி தனவரவுக்கும் இடமுண்டு, கடமையாற்றுமிடத்தில் ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**இடபம்:-** புதிய தொழில் குறித்து சிந்தனை உருவாகும், வியாபாரத்தால் முன்னேற்றம் உண்டு, சிலர் வாழ்க்கையில் மாற்றங்கள் உருவாகும், நல்ல நாள்.

**மிதுனம்:** வணிகத்துறையில் வாய்ப்புக்கள் கிடைக்கும், சொத்து விவகாரத்தில் நல்ல முடிவு ஏற்படும், புதுமையான எண்ணங்கள் தலைதூக்கும், ஆதரவுக்கும் இடமுண்டு.

**கடகம்:-** எதிலும் மந்தநிலை தென்படும், கடன் தொல்லை அதிகரிக்கலாம், தனிவழியில் நாட்டம் செலுத்துவீர்கள், சிறிவரும் கோபத்தை அடக்கவும்.

**சிங்கம்:-** பக்கத்தில் படுகுழி, பார்த்திருப்பவர் பகைவர், விழிப்புடன் இருப்பின் வெற்றியுனதே.

**கன்னி-:** வாழ்க்கைப் பூங்காவில் வசந்தம் நிலவும், சுபகருமங்கள் நடைபெறும், காரியத்தில் கண் வைக்கவும், மகிழ்ச்சிகரமான தினம்.

**துலாம்:-** அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயெ இருப்பர், குடும்பத்திலும் பூசல்கள் தோன்றக்கூடும், பிணிக்கு இடங்கொடாது நடக்கவும்.

**விருச்சிகம்:-** வாகன விருத்தியுடன் இல்லத்தில் திருப்தி காணும், மோகன வாழ்வும் கிட்டும், முன்னேற்ற வழியும் தோன்றும்.

**தனுசு:-** கனிவான பேச்சு, காந்தம்போல் பார்வை, புத்திரர் புகழும் உண்டு, புதினமும் பலவுண்டு.

**மகரம்:-** தவறுகள் நடக்கலாம், நிலையும் தடுமாறும், சிலருக்கு விஷபயமும் உண்டு, நிதானம் வேண்டும்.

**கும்பம்:-** குடும்பத்தில் அமைதி நிலவும், களஸ்திரப் பேச்சும் உண்டு, கண்ணியமான நாள், பெற்றோர் ஆதரவும் கிடைக்கும்.

**மீனம்:-** விபரீதங்கள் விளையும், வியாபாரத்துறையில் நஷ்டம் ஏற்படும், அக்கினி ஆயுத பீடைக்கு இடமுண்டு, நிதான புத்தியுடன் சுகாதாரத்தைப் பேணிக் கொள்ளவும்.

சோதிடக் கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## பஸ் விபத்தில் 33 பேர் பலி!

பம்பாய், பெப், 11
பம்பாயில் நேற்று பிரயாணிகள் பஸ் ஒன்று எதிரே வந்த எண்ணைத்தாங்கியுடன் மோதியதை அடுத்து 33 பேர் பலியாகியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

மரணமானவர்களில் 6 பெண்களும், ஒரு குழந்தையும் அடங்குவர் [இ]

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
High Velocity
வியட்நாம் புரட்சிக்கதை

“நாட்டில்

## அமைதியை நிலைநாட்டுவதே பொலிசாரின் கடமை”

(தெல்லிப்பழை)
“நாட்டில் அமைதியையும், ஒழுங்கையும் நிலைநாட்டுவதே பொலிஸாரின் கடமை. அமைதிக்குப் பங்கம் ஏற்படும்போது அதை அடக்கி, நாட்டிற்கு நல்லதுசெய்யும் பொலிசாரோடு, கிராம அபிவிருத்திச் சங்கங்கள், சனசமூகநிலையங்கள் மற்றும் பொது ஸ்தாபனங்களும் ஒத்துழைத்தல் வேண்டும்.”

இவ்வாறு ஏழாலை வடக்கு, மேற்கு கிராமாபிவிருத்திச் சங்கத் திறப்புவிழாவிலும், கலாநிதி சனசமூகநிலைய 10வது ஆண்டு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துசொற்பொழிவாற்றிய சுன்னாகப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. கு சுகுனேந்திரன் பேசுகையில் கூறினார்.

மேற்படி விழா, கிராம அபிவிருத்திச் சங்க முன்றலில் திரு. த. நாவேந்தன் தலைமையில் நடைபெற்றது.

உடுவில் எம். திரு. வி. தர்மலிங்கம் புதிய கிராமாபிவிருத்திச் சங்கத்தைத் திறந்து வைத்தார்.

திரு. சுகுனேந்திரன் தொடர்ந்து பேசுகையில், “இப்பொது ஸ்தாபனங்கள் பொலிஸ்பகுதியினருடன் தொடர்புகொண்டு கிராமங்களில் காணப்படும் குற்றங்களைத் தடுப்பதற்கு உறுதுணை புரிதல்வேண்டும். அதேபோல் பொதுமக்களும் எந்நேரமும் தங்கள் குறைகளைப் போக்கிக்கொள்ள முன்வரவேண்டும்” என்றார்.

இவ்விழாவில் “சீதனம் வாங்குவது தமிழ்ச் சமுதாயத்திற்கு உகந்ததா?” என்ற பொருள் பற்றிப் பட்டிமன்றமும், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. [கொ-நி-ச]

## “பாடுபட்டு உழைத்த பணம் விரயமாவதா?”

[மானிப்பாய்]
“பாவனையாளர்கள் கஷ்டப்பட்டு உழைத்த பணம் பலவழிகளாலும் வீண் விரயமாக்கப்படுகிறது. குறைந்த அளவு நிறை கொள்ளைலாபம் போன்றவற்றாலும் பாதிக்கப்படுகிறார்கள். இந் நிலையை ஒழிக்க பொதுமக்கள் முன்வரவேண்டும்.”

மானிப்பாய் தொகுதி நுகர்ச்சிப் பொருள் பாவனையாளர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் நடைபெற்றபோது தலைமை வகித்துப் பேசுகையில் திரு. எஸ். கணேஷ்குறிப்பிட்டார்.

பாவனையாளர் சங்கத் தலைவர் திரு. எம். வெற்றிவேலு பேசுகையில், பொதுச் சந்தைகளிலும், தனியார் கடைகளிலும், கூட்டுறவுச் சங்க விற்பனை நிலையங்களிலும் குறிப்பாக தெங்கு பனம் பொருள் விற்பனவு நிலையங்களிலும் பாவனையாளர்கள் பலவிதமாகவும் சுரண்டப்படுகிறார்கள். இந் நிலையை மாற்ற இச்சங்கம் முன்னின்று உழைக்கும் என்றார்.

புதுமடம் வாசகர் வட்ட கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. எம். வெற்றிவேலு தலைவராகவும், திரு. க. செல்வநாயகம் துணைத் தலைவராகவும், திருவாளர்கள் எஸ். கணேஷ், கே. எம். பிள்ளை ஆகியோர் இணைக் காரியதரிசிகளாகவும், திரு எஸ். சின்னத்துரை தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

கிளிநொச்சியில்

## பால் சேகரிப்பு நிலையம் அமைக்கப்படும்

### உதவி அரசாங்க அதிபர் தகவல்

[கிளிநொச்சி]
“எமது நாட்டில் பாலுணவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைப் போக்க உள்ளூரில் பாலுற்பத்தியை அதிகரிக்க வேண்டும். அரசாங்கமும் இதற்காகவே கால்நடை வளர்ப்பிற்கு ஊக்கமளித்து வருகின்றது. கிளிநொச்சியில் பாற்பண்ணையாளர்களின் வசதியை முன்னிட்டுப் பால் சேகரிக்கும் நிலையம் ஒன்றும் விரைவில் நிறுவப்படவுள்ளது.”

இவ்வாறு கிளிநொச்சி பாற்பண்ணை உற்பத்தியாளர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் உதவி அரசாங்க அதிபர் திரு. பி சிவசுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், ‘பாற்பண்ணை வைத்திருப்போர் அனுபவித்துவரும் கஷ்டங்களைப் போக்குவதில் இத்தொகுதி எம். பி அதிக அக்கறை காட்டி வருவது பெரும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. சகல பண்ணையாளர்களும் பால் சேகரிக்கும் நிலையத்திற்கே பாலை வழங்கி இந்த ஸ்தாபனம் நல்லமுறையில் இயங்க ஒத்துழைப்பு வழங்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டார்.

கிளிநொச்சி எம். பி. திரு வீ. அனந்தசங்கரி பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். இச் சங்கத்தின் தலைவராக திரு. கே. எஸ். வீரசிங்கமும், செயலாளராகத் திரு அ. எட்வேட்டும், பொருளாளராகத் திரு வீ. இராசேந்திரமும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர் [உடுப்பி-நி-உ]

நள்ளிரவில் நடமாட்டம்:

## வாலிபர் கைதானபோது திருட்டு வெளிப்பட்டது

(கொக்குவில்)
யாழ். பஸ் நிலையத்திற்கு அண்மையில் நள்ளிரவு வேளை சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய வாலிபர் ஒருவரை யாழ். பொலிசார் கைதுசெய்து விசாரணை செய்தபோது அவரிடமிருந்து 100 ரூபா பெறுமதியான திருட்டு மண்ணெண்ணை அடுப்பொன்று கைப்பற்றப்பட்டது.

யாழ் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த கான்ஸ்டபிள்களான எம். யோகேந்திரன், எஸ். குணரெத்தினம், ரத்னசிறி ஆகியோர் யாழ். நகரில் ரோந்து சுற்றிவந்தபோது சாவகச்சேரியைச் சேர்ந்த பொன்னம்பலம் சுந்தரராஜா என்ற (30 வயது) பிரஸ்தாபநபரைக் கைதுசெய்தனர்.

யாழ். குற்றத்தடுப்பு பகுதி

(6-ம் பக்கம் பார்க்க)

### கம். (இடது) கட்சி அறிக்கை

# மாணவர்களை வீதியில் நிறுத்தி பழிவாங்குவதா?

## தரப்படுத்தலை மறுபரிசீலனை செய்வதே முறை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர்களை பகிஷ்கரிப்பு நடவடிக்கைக்குத் தூண்டிய தரப்படுத்தல் முறையை மறுபரிசீலனை செய்வதற்கு அரசாங்கம் மாணவர்களை வீதியில் நிறுத்தி பழிவாங்க முற்படுவது எவ்விதத்திலும் நியாயமாகாது. அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கை அடக்குமுறை அம்சங்கொண்டதாகும். மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் எதிரான அரசாங்கத்தின் கதவடைப்பு நடவடிக்கையை எமது கட்சி மிகவன்மையாகக் கண்டிக்கின்றது.

மேற்கண்டவாறு இலங்கைக் கம்யூனிஸ்ட்கட்சியின் [இடது] வடபிரதேச செயலாளர் திரு. கே செந்திவேல் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார் மேலும் அவ்வறிக்கையில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:-

தமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிக்கெதிராக தமது அதிருப்தியையும் எதிர்ப்பையும் வெளிப்படுத்தும் வகையில் மாணவர்கள் அமைதியான பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். மாணவர்களின் இந்த நடவடிக்கை இதற்கு முன்பும் பல தடவைகள் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்றன அதுமட்டுமன்றி இந் நடவடிக்கை அரசாங்கமும் அதன் தலைவர்களும் கூறிவரும் ஜனநாயகம், தார்மீகம் போன்றவற்றிற்கு உட்பட்டதேயாகும், தாங்கள் கூறுகின்ற போதனைகளையும் மறந்து தமிழ் மாணவர்களைப் பழிவாங்க எத்தனிப்பது போசமான அடக்குமுறையே அன்றி வேறெதுவும் இல்லை

ஆதலால் அரசாங்கம் மாணவர்கள் மீதும், ஆசிரியர்கள் மீதும் பழிவாங்க முற்படும் நடவடிக்கைகளை விடுத்து அவர்களை நிபந்தனையின்றி உடன் பாடசாலைகளில் அனுமதிப்பதுடன் தரப்படுத்தல் முறையை மறுபரிசீலனைசெய்ய வேண்டும் எனவும் எமதுகட்சி கேட்டுக் கொள்கின்றது.

## புரட்சிகர மார்க்ஸிச கட்சி கண்டனம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலைகளைப்பகிஷ்கரித்த மாணவர்களை அனுமதிக்க மறுக்கும் கல்வி அமைச்சின் போக்கை புரட்சிகர மார்க்ஸியக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளை வன்மையாகக் கண்டிக்கிறதுள்ளது.

மேற்படி கிளையின் செயலாளர் திரு. கே. பரராஜசிங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

இனரீதியான தரப்படுத்தல் கொள்கையை யு. என். பி. அரசாங்கம் பல்கலைக்கழக அனுமதியில் கைக்கொள்ளத் தீர்மானித்திருப்பதை எதிர்த்து பாடசாலைகளை பகிஷ்கரித்த மாணவர்களை பாடசாலையில் அனுமதிக்காது தெருவீதிகளில் துரத்தி விடுவதை புரட்சிகர மார்க்ஸியக்கட்சி யாழ்ப்பாணக்கிளை வன்மையாகக் கண்டிக்கின்றது. யாழ். நகரில் நேற்று பாடசாலைக்குச் சென்ற மாணவர்கள் பலர் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படாது விரட்டப்பட்டனர். சகல மாணவர்களையும் உடனடியாக பாடசாலைகளுக்குள் அனுமதிக்கவேண்டும் எனவும், அவர்களைப் பாடசாலைக்குள் அனுமதிப்பதற்கு எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படக்கூடாது னவும் அரசாங்கத்தை நாம் வற்புறுத்துகிறோம்.

மேலும் பகிஷ்கரிப்பு காலத்தில் வீவில் நின்ற ஆசிரியர்களை வேலையிலிருந்து நீக்குவதைக் கண்டிப்பதுடன் அவர்கள் அனைவரையும் எவ்வித நிபந்தனையுமின்றி கடமையாற்ற அனுமதிக்கவேண்டும் எனவும் கட்சி கோருகின்றோம்.

### வாலிபர்...

[5ம் பக்கத் தொடர்ச்சி]

பொலிஸ் பொறுப்பதிகாரி கே.சிறீதரன் விசாரணைசெய்த போது பிரதான வீதியிலுள்ள தேநீர்க்கடை ஒன்றில் வேலைசெய்த இவர் கடையிலுள்ளவர்கள் உறங்கியபின் மேற்படி பொருளைக் களவாடிச்சென்றது தெரியவந்துள்ளதாம்.

சந்தேநபர் காவலில் வைக்கப்பட்டுள்ளார். புலன் விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது [உ]

### அண்ணாவின்...

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

இந்தி மொழி எழுத்துக்களைக் கொண்ட அந்தத் தபால் தலையை செய்து வைக்க மறுத்தார். இது அவரது அரசியல் சாணக்கியத்தைப் படம் பிடித்துக் காட்டுகிறதென்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் 'அண்ணா நினைவு வாரக் கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் திரு சா. ஆ. தருமரத்தினம் குறிப்பிட்டார்.

கருத்தரங்கிற்கு முன்னாள் யாழ் நகர முதல்வர் டாக்டர் ச. அ. தருமலிங்கம் தலைமை வகித்தார்.

திரு. தருமரத்தினம் தொடர்ந்து பேசுகையில். "தமிழகத்தை இந்தித் திணிப்பு ஆக்கிரமித்த வேளையில் "எப்பக்கம் வந்திடும் இந்திமொழி அது எத்தனை பட்டாளம் கூட்டிவரும்" என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை போராட்டச் சுலோகமாக உச்சரித்து தமிழ் நாட்டில் இருந்து ஆதிக்க இந்தி மொழியை விரட்டியடித்தார்

அண்ணா ஊட்டிய உணர்வு தமிழகத்தில் இன்னமும்செத்துவிடவில்லை. என்பதற்கு பின்னால் வந்த இந்தி எதிர்ப்புப் போராட்டங்களின் போது தமக்குத் தாமே தீமூட்டி இறந்துபோன தீரர்களின் வரலாறு சாட்சி பகருகின்றது இந்தித்திணிப்பை எதிர்த்த அண்ணாமூட்டிய தீச்சுவாலை தான் அப்போது தமிழகத்தின் முதல்வராகவிருந்த அனைத்து இந்தியத் தலைவரான காமராஜர் அவர்களை சாதாரண ஒரு மாணவனிடம் தேர்தலில் தோல்வியைத் தழுவும்படி செய்தது" என்றார்

[கெ-உ]

### பல பாடசாலை...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

ஸ்ரான்லி மகாவித்தியாலயத்தில் மாணவர் எவரும் உள்ளே செல்ல அனுமதிக்கப்படவில்லை. சில பாடசாலைகளில் வாசல் கேட்டுகள் முன் கூட்டியே மூடப்பட்டிருந்தன. இதனால் ஆசிரியர்களும் வெளியில் நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டதாம்.

கிளிநொச்சிப் பகுதியில் ஒரு பாடசாலையில் மறுஅறிவித்தல் வரை பாடசாலை மூடப்பட்டுள்ளது என்ற அறிவித்தல் தொங்கவிடப்பட்டிருந்ததாம்.

சில பாடசாலைக்குள் சென்ற மாணவர்கள் பலவந்தமாக ஆசிரியர்களால் வெளியேற்றப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்துள்ளது.

இன்றும் மாணவர்கள் பாடசாலைக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும், வைத்திய அத்தாட்சிப் பத்திரம் கொண்டுவரும் மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அதிபர்கள் வட்டாரங்கள் தெரிவித்தன.

### வடக்கில் —

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானத்துக்கு அமைவாக நடந்துகொள்ளுமாறு சங்க உறுப்பினர் சகலரையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கேட்டுள்ளது.

(கொக்குவில் நிருபர்)

### ஏப்ரலுக்குள்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வதே எமது நோக்கமாகும். எல்லாப் பிரஜைகளும் எமது ஆட்சியில் சமமாகவே கணிக்கப்படுவர். மக்களரட்சியில் வேற்றுமை இருக்க முடியாது. இந்த அடிப்படையிலேயே எமது சேவை செயல்படுத்தப்படுகிறது. இந்த நாட்டில் போக்குவரத்து சிறப்பாக இருக்கவேண்டும். இதற்கான முயற்சிகளிலே நாம் ஈடுபட்டுள்ளோம். மக்களுக்கு வசதியளிப்பதே எமது முக்கிய நோக்கமாகும் என்றார்.

யாழ். மாநகர விசேடஆணையாளர் திரு. கே. சிவஞானம் பேசுகையில் யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஏற்படும் இடநெருக்கடியையும் பிரயாணிகள் கஷ்டங்களையும் நீக்கும் வகையில் இப்புதிய பஸ்தரிப்பு நிலையம் உருவாக்கப்பட்டதென்றும் யாழ். குடா நாட்டு மக்களுக்கு ஏற்படும் இது போன்ற கஷ்டங்களை நீக்க யாழ் மாநகரசபை பரலவான பல திட்டங்களை இந்த நகரில் செயல்படுத்துமென்றும்.

மாவட்ட அரசாங்க அதிபர் திரு லயனல் பெர்னாண்டோவும் மற்றும் திணைக்கள அதிகாரிகளும் அமைச்சருடன் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

[வண். நிருபர்]

### வடபகுதி மக்களுக்கு . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கம், பருத்தித்துறை எம். பி. திரு. கே. துரைரத்தினம், கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி, மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம், வடபிராந்திய புகையிரதப்பகுதி அத்தியட்சகர் குணசேகரா, வடபிராந்திய இ. போ. ச. அத்தியட்சகர் திரு. அமரசிங்கம், வடபிராந்திய கட்டுப்பாட்டாளர் திரு எஸ். தியாகராசா, வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. எகொடப்பிட்டியா, உதவிப் பொலிஸ் அதிபர் ஹேரத் மற்றும் பல பெரியோர்களும் அம்மாநாட்டில் கலந்து கொண்டனர்.

திரு. மொகமட் தொடர்ந்து பேசுகையில் வடபகுதி மக்களின் கஷ்டங்களை நான் நேரில் கண்டுள்ளேன். தொலைபேசி வசதி வயர்லஸ் வசதி போன்றவை இருந்தும் கூட இவ்வூர் மக்களுக்கு உரியவிதத்தில் பயன்படுவதில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு தொலைபேசிமூலம் தொடர்பு கொள்ள வேண்டுமானால் ஆகக்குறைந்தது 5 மணி நேரமாவது காத்திருக்க வேண்டியுள்ளது. இதுபோன்ற தீர்க்கப்படாத பல பிரச்னைகள் இங்கும் தென்பகுதியிலும் உண்டு. இவையெல்லாம் தீர்க்கப்படமுடியாததொன்றல்ல எமது அரசாங்கம் எக்காரணம்கொண்டும் மக்கள் மத்தியில் வித்தியாசம் காட்ட விரும்பமாட்டாது. எல்லோருக்கும் ஒரேவிதமான சேவையே செய்யவிரும்புகிறது.

வடபகுதிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் போக்குவரத்துச் சேவை பற்றிய பல குறைகளை எடுத்துக் கூறினார்கள். அவைகளை தீர்த்துவைக்க ஆவனசெய்வேன்.

வடபகுதியில் இ. போ. ச. சாரதிகளுக்கான வெற்றிடங்கள் இல்லாத காரணத்தினால் வடபகுதியில் இருந்து தெரிவான பல பஸ் சாரதிகள் தென்னிலங்கையில் வேலை செய்கிறார்கள். வடபகுதியில் சாரதிகளுக்கான காலி இடங்கள் ஏற்படும்போது இவர்கள் படிப்படியாக இங்கு மாற்றப்படுவார்கள். அதேபோல் தெரிவுசெய்யப்பட்டு வடபகுதியில் பயிற்சி அளிக்கப்பட்ட பஸ் நடத்துனர் பலர் இருக்கிறார்கள். சந்தர்ப்பம் வரும்போது அவர்கள் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள். கிளிநொச்சிப் பகுதியைச் சேர்ந்த சிலர் பஸ் நடத்துனர் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டபோதும் பயிற்சி அளிக்கப்படவில்லை. காலி இடம் வரும்போது இவர்களுக்கு முன்உரிமை வழங்கப்பட்டு பயிற்சி அளிக்கப்படும்.

வடபகுதி இ போ. ச. பஸ்கள் பல உதிரிப்பாகங்கள் இல்லாது சேவையில் ஈடுபடுத்தமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. உதிரிப்பாகங்களை இறக்குமதி செய்யும் உரிமை இ. போ. ச. பிராந்தியசபைகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே எதிர்காலத்தில் இப்படி ஒரு நிலை ஏற்படாது என்று கூறினார்.

வடபகுதியில் போதிய பஸ் இல்லாததால் 60 பஸ்களை அனுப்பும்படி கோரிக்கை விடப்பட்டபோது 50 பஸ்கள் அனுப்பி வைப்பதாக அளித்துள்ளார்.

கீரிமலையிலும், வேலணையிலும் பஸ் டிப்போ அமைக்கும்படி கோரிக்கை விடப்பட்டபோது கீரிமலையில் பஸ் டிப்போ அமைப்பதற்கு ஆவன செய்யுமாறு வடபிராந்திய இ. போ. ச. அத்தியட்சகரிடம் பணித்துள்ளேன்.

யாழ் நகரில் 6 லட்சம் ரூபா செலவில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கு முதல் கட்ட வேலைக்கு 3 லட்சம் ரூபாவை ஒதுக்கித் தருவதாகவும் அமைச்சர் பணித்துள்ளார்.

#### உறங்கல் இருக்கை வசதி

காங்கேசன்துறையிலிருந்து பளைவரை செல்லும் புகையிரதங்களை கிளிநொச்சிவரை செல்வதற்கும், யாழ்ப்பாணம கொழும்பு புகையிரதத்தில் (இரண்டாம் வகுப்பு) 60 உறங்கலிருக்கை இருப்பதாகவும் அதில் 10 உறங்கலிருக்கைகள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் பதிவு செய்யப்படுவதாக மிகுதி 50-ம் கொழும்பிலேயே பதிவு செய்யப்படுகிறதென் இனிமேல் 25 உறங்கலிருக்கைகளை யாழ்ப்பாணத்திலும், 5 உறங்கலிருக்கைகளை கொடிகாமத்திலிருந்தும் பதிவுசெய்ய ஒழுங்குசெய்து தரும்படி கேட்டபோது அதற்கும் சம்மதம் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், நான் போக்குவரத்து மந்திரிப்பதவி ஏற்றபின் இதுவே எனது முதல் யாழ். விஜயம் இவ்விஜயத்தின் போது சிறந்த பேச்சாளரான திரு. அமிர்தலிங்கம் மிகவும் அன்பாக இனிய மொழிபேசி என்னை வரவேற்றுள்ளது எனது சொந்த வீட்டில் இருக்கும் போது எவ்வளவு சந்தோசமும் மனநிறைவும் ஏற்படுமோ அவ்வாறு இங்கு இருக்கையில் எனது மனநிலை உள்ளதுஎன்று கூறினார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோவும் சொற்பொழிவாற்றினார்.

## "வளரும் குழந்தைகள் கையிலேநாட்டின் சுபீட்சம்"

[யாழ்ப்பாணம்]

"எமது நாட்டின் சுபீட்சம் வருங்காலத் தலைவர்களாகிய இன்றைய குழந்தைகளிலேயே தங்கியுள்ளது. குழந்தைப் பராயத்திலே சகல வசதிகளையும் கொடுத்து உத்தம தலைவர்களாக உருவாக்கவேண்டியது சமூகத்தின் கடமை. நாலரை வயதுச் சிறுவர்களைப் பாடசாலையில் அழிக்கும் திட்டம் அமுலுக்கு வரின் பாலர் பாடசாலைகளெல்லாம் பாலர் இல்லங்களாக்கப்படவேண்டும் இதற்குச் சகல சமூக இயக்கங்களும் முன்னின்று உழைக்கவேண்டும்."

கொட்டடி சிவன்பண்ணை வீதியிலுள்ள இலங்கைப் பாலர் ஆசிரியர் சங்கச் செயற்குழுக் கூட்டம். அதன் காரியாலயத்தில் நடைபெற்றபோது பேசிய சங்கத் தலைவி நகுலேஸ்வரி துரையப்பா மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில்: தமது சங்கம், இயக்கங்களுடனும், கல்வியமைச்சுடனும் தொடர்புகொண்டு, சத்துள்ள மதியபோசனத்துடன் இலவசக் கல்வியும் பெறச் சகல குழந்தைகளுக்கும் வசதி வாய்ப்பளிக்க முயற்சி மேற்கொண்டுள்ளதாகவும் கூறினார்.

தனாதிகாரி செல்வி சிவமணி வீரவாகு பேசுகையில், இவ்வாண்டு சிறுவர் ஆண்டாகையால் பிற இயக்கங்களிடமிருந்து பெறும் உத்தேச உதவிகளில் பெரும்பகுதியைக் குழந்தைகளின் உணவுக்கும், விளையாட்டு உபகரணங்களுக்கும் ஒதுக்கவுள்ளதாகக் குறிப்பிட்டார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்க அச்சகத்தில் 1979-ம் ஆண்டு பெப்ரவரிமாதம் 13-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General PostOffice The Eelanaadu P B No: 49, Telegram: Eelanaadu, Telephone: 389, Registered as a News paper in Sri Lanka.-